**கவனிக்க**.- 2006.09.15 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(ஆ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1464 - 2006 සැප්තැම්බර් 22 වැනි සිකුරාදා - 2006.09.22

1464 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 884 |
| அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | 884 |
| ஏல விற்பனைகள் | 886 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, செத்தெம்பர் 29 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, செத்தெம்பர் 15 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுதல்

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 91, 2/3 பொது வீதி, அக்கரைப்பற்று - 03 எனும் விலாசத்தில் வதியும் அகமது லெவ்வை ஆதம்லெவ்வை ஆகிய நான் (தேசிய அடையாள அட்டை இலக்கம் - 473192497 V) நொத்தாரிசு கட்டளைச் சட்டம் அத்தியாயம் - 107 (தற்போது அத்தியாயம் - 110) இன் முதலாவது அட்டவணையின் 'ஆ' பகுதியின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இவ்வருட இறுதியில் நடைபெற இருக்கும் நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகவும், அதன் பலனாக தமிழ் மொழி மூல நொத்தாரிசுவாக தெரிவாவதற்காகவும் அனுமதி பெறுவதற்காக பதிவாளர் நாயகத்திற்கு விண்ணப்பம் ஒன்று செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

ஏ. ஆதம்லெவ்வை.

91, 2/3, பொது வீதி,
அக்கரைப்பற்று - 03.
2006.09.05

9-701

## திருத்தம்

### நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்கு தோற்றுதல் தொடர்பிலான அறிவித்தல்

2006.08.18 ஆந் திகதிய 1459 ஆம்இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப்பத்திரிகையின் "பகுதி I: தொகுதி :II (ஆ) விளம்பரங்கள்" இல் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப் பிட்ட தலையங்கத்தின் கீழான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள 'சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில்' என்பதை 'சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவில்' எனவும் 'ஜஹூபர்' என்பதை 'ஜஹுபர்' எனவும் திருத்தி வாசிக்கப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

யாசின்பாவா ஜஹுபர்.

51, மத்திய வீதி,
சம்மாந்துறை 07.

9-752

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளு மற்றும் அந்நிய குடிவகைக்கான தவறணைகள் குத்தகை கொடுத்தல் - 2007

1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1983ஆம் ஆண்டினதும் அதற்குப் பின்னதுமான கால எல்லைக்குள் செல்லுபடியாகும் கள்ளுத் தவறணையினதும் வெளிநாட்டுக் குடிவகைகளையும் (தானியங்களைக் கொண்டு இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் குடிவகை உட்பட) தவறணைகளில் விற்பனை செய்வதை குத்தகைக்கு கொடுப்பதற்கானதும் அக்காலப்பகுதியில் செயற்படுத்தப்படும் சகல கலால் வரி குத்தகைக்கும் உட்பட்டு 2007 ஆம் ஆண்டிற்குள் கீழ்க் குறிப்பிடப்படும் உப அலகுகளில் காணப்படும் கள்ளுத் தவறணைகளிலும் வெளிநாட்டு குடிவகை சாலைகளினதும் (தானியங்களைக் கொண்டு இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் குடிவகை உட்பட) சில்லறை விற்பனையில் தனியுரிமை கொள்வனவு செய்தல் சம்பந்தமாக கொத்மலை பிரதேச செயலாளர் மூலமாக 2006.09.14 ஆந் திகதி கீழ்குறிப்பிடப்படும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நேரம் வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. (அ) சகல கேள்விப் பத்திரங்களும் இத்தீவின் பிரதேச செயலாளர் அலுவலகங்களில் பெறப்படும் குறிப்பிட்ட படிவத்தில் மாத்திரமே அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலும் செலுத்தி அதன் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.

(இ) பிரதேச செயலாளரினால் வழங்கிய கேள்விக்காரரின் சொத்துக்கள் உட்பட அசைவற்ற சாதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சியும் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும். கேள்விகளும் பெறுமதிக்கான அத்தாட்சிப் பத்திரமும் சமர்ப்பிக்கும்போது கள்ளுத் தவறணைகளும் வெளிநாட்டு குடிவகை சாலைகளினதும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவர்களாக கேள்விக்காரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும்போது கீழ்க்காணும் விடயங்களை கேள்விக்காரர் கருத்தில் கொள்ள வேண்டும் :-

(1) கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித்தொகை எழுத்திலும் இலக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(2) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் கையொப்பமிடும் சாட்சிகளினதும் ஆள் அறிமுக அட்டை இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள் மாற்றங்கள் செய்யப்படின் கேள்விக்காரரின் முழுமையான கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

4. சிறப்புரிமை பெற்ற கேள்விக்காரர்கள் தமது ஆள் அடையாள அட்டையை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி நிபந்தனைகளுக்கு உட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

5. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச்செய்யப்பட்ட பற்றுச்சீட்டு, பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரை இடப்பட்ட உறையின் மேல் மூலையில் தவறணைக்கான பெயரையும் இலக்கத்தையும் குறிப்பிட்டு பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விகள் பெறப்படவேண்டிய கால எல்லைக்குள் பதிவுத் தபாலில் இடப்படல் வேண்டும். தபாலில் கேள்விகள் சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவடைவதற்குள் பதிவுத் தபாலில் கொத்மலை பிரதேச செயலாளருக்கு அனுப்ப வேண்டும். கேள்விகளை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி கால எல்லை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தருணத்தில் கேள்விக்காரர்கள் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

எந்தவொரு கேள்விப் பத்திரத்தையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ எனக்கு அதிகாரம் உண்டு. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் விற்பனை தினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் கொத்மலை பிரதேச செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட மூன்றுமாத தவணைக்குள் குறையாத பிணைப்பணமாக கொத்மலை பிரதேச செயலாளருக்கு செலுத்த வேண்டும். மேற்படி வைப்புப் பணம் புஸ்ஸல்லாவ – இலங்கை வங்கியில் ஒரு வருட நிரந்தர சேமிப்புக் கணக்கில் எனது பெயரில் வைப்புச் செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணம் காசோலையாகவோ அல்லது இலங்கை வங்கி, மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் காசோலை மூலமாகவோ செலுத்தப்படல் வேண்டும். தேவையான முத்திரைகளைச் செலுத்தி குத்தகைக்காரர் நிபந்தனைகளிலும் ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடல் வேண்டும்.

6. நியமிக்கும் தவணைக்கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே கேள்விப்பத்திரத்தை சமர்ப்பிக்கும் தகைமை உடையவராவார்.

7. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியும் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

8. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2006.10.13 ஆந் திகதி மு. ப. 10.30 மணியளவில் விற்பனை செய்யப்படும்.

9. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு கொடுப்பது சம்பந்தமாக முடிவான தீர்மானம் என்னுடையதாகும்.

10. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்களை கொத்மலை பிரதேச செயலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஜானக தர்மகீர்த்தி,
பிரதேச செயலகம்,
கொத்மலை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கொத்மலை,
2006.08.23.

**அட்டவணை**

| இடமும் பெயரும் | தவறணை நிறுவப்பட வேண்டிய இடம் | கேள்விப்பத்திரம் பெறப்படும் காலம் | கேள்விப்பத்திரம் பிணைப்பணம் ரூபா |
|---|---|---|---|
| **கள்ளுத் தவறணை** | | | |
| 1. கடதொறபிட்டிய | கடதொறபிட்டிய கிராமம் | மு. ப. 10.30 2006.09.14 | 1,000 |
| 2. ஒத்தலாவ | கேள்விப்பத்திர மூலமாக தேர்ந்தெடுக்கப்படுகின்ற இடத்திற்கான அனுமதியை பிரதேச செயலாளரிடமிருந்து பெறுதல் வேண்டும். | மு. ப. 10.30 2006.09.14 | 1,000 |
| 3. கட்டுககித்துல | கட்டுககித்துல கிராமம் | மு. ப. 10.30 2006.09.14 | 1,000 |
| **வெளிநாட்டுக் குடிவகை தவறணை** | | | |
| 1. பூண்டுலோயா | மேட்டுக்கடை வீதி, பூண்டுலோயா | மு. ப. 10.30 2006.09.14 | 3,000 |

9-666

# ஏல விற்பனைகள்

## கமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் - அம்பலன்தோட்டை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை*

கமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் விபரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் 2006., ஒற்றோபர் 17 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்துவில் கல்லா கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் ஏ. வீரசிங்கவின் 2001.09.07 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 827 இல் காண்பிக்கப்பட்ட காணித்துண்டான லொட் B யான இக்காணித்துண்டு நிலஅளவையாளர் ஏ. வீரசிங்கவின் 1995.08.20 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 344 இல் காண்பிக்கப்பட்ட பரகாவத்த அல்லது கொடபொரகாவத்த காணியின் லொட் A மற்றும் காலி நீதிமன்ற வழக்கு இலக்கம் P/ 6091 இல் இணைக்கப்பட்டுள்ள நிலஅளவையாளர் டி. வீரசேகரவின் 14.10 மற்றும் 07.18 மற்றும் 20.11.85 திகதியுடைய வரைபடம் இலக்கம் 2161 இல் காண்பிக்கப்பட்ட தெல்காவத்த அல்லது கனத்தவத்த என்ற காணியின் லொட் 1 என்ற இவ்விரு காணிகளையும் ஒன்றாக்கப்பட்ட காணித்துண்டான நில காணியின் விஸ்தீரணம் (0ஏ. 1றூ. 37.6பே.) அல்லது 0.1963 ஹெக்டேயார்.

*(கடன் எடுத்த கலுதொட்டகே அமரவீர காணியை கமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு ஈடுவைத்துள்ளார்)*

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 21.07.2006 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் "திவயின", "த அயிலண்ட்" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் ஏலவிற்பனை விளம்பரத்துக்காக 22.09.2006 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 22.09.2006 ஆந் திகதியுடைய "லங்காதீப", "த அயிலண்ட்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் வழி.**- காணியில் இருந்து 7. கி. மீ. தூரம் அக்குரஸ்ஸ வீதியில் சென்று கல்லா அரசாங்க பாடசாலை தாண்டிய பிறகு அதன் பிறகு பாடசாலை லேனில் திரும்பி 5 ஆவது கி. மீ. கட்டை படிநொவர வர்த்தக நிலையம் அருகில் இக்காணி வலது பக்கம் அமைந்துள்ள பிரதேச சபை வீதியில் அமைந்துள்ள 3 ஆவது காணி மற்றும் பிரதான வீதியில் இருந்து 50 மீட்டரில் அமைந்துள்ள காணி.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- ஏலவிற்பனையின் இறுதியில் உத்தேசக் கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களைப் பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிக்கான விற்பனை வரி 1%;
(3) ஏலதாரரின் தரகு பணமாக கொள்வனவு விலையின் 2 1/2% ;
(4) விற்பனையின் பத்திரத்தை தயாரிப்பதற்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000 ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலவிற்பனைகளுக்காக செலவு செய்யப்பட்ட எல்லா விளம்பரச் செலவுகள் ;
(7) கொள்வனவு விலையின் மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள், கமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்- அம்பலன்தொட்ட கிளை)யில் அல்லது பிரதான கிளையில் செலுத்த வேண்டும்.

உரித்து உறுதிகளையும் மற்றும் தொடர்பு ஆவணங்களையும் பின்வரும் இடத்தில் பெறமுடியும் : முகாமையாளர், கமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட், 129, திஸ்ஸ வீதி, அம்பலன்தொட்ட. தொலைபேசி இல. 047-2223816, 047-2223818-9, பெக்ஸ் இல. : 047-2223817.

எல். பி. சேனாநாயக்க,
கொழும்பு மாவட்ட நீதிமன்றம், வர்த்தக மேல் நீதிமன்றத்துக்கான சிரேட்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பிடுநர் மற்றும் நீதிமன்ற ஆணையாளர் அத்துடன் அரசாங்க மற்றும் வர்த்தக வங்கிகளுக்கான உத்தரவுபெற்ற ஏலதாரர்

தொலைபேசி / பெக்ஸ்இல. 0112-2443393.

9-680

---

## ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்- கோட்டே கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், ஹேவாகம் கோறளை பள்ளேபற்றுவில் கடுவெல பிரதேச சபை எல்லைக்குள் தலஹேனவில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். இத்தமல்கொட அவர்களால் 1985.03.21, 1985.04.03, 1985.05.10, 1985.06.12 ஆந் திகதியிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 2091 இல் துண்டு39 எனக் குறிக்கப்பட்ட காணியிலிருந்தும் வெளியிலிருந்தும் இப்பன வளவ்வத்த என அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டானது கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள அனைத்துமுடன் ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 12பேர்ச்சஸ்)**

*(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்கு சொத்தை ஈடுவைத்தவரும் கடமைப்பட்டவருமான சுமித் பிரியந்த ஹல்விட்டிகே, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். பீ. எம். மொஹொட்டி அவர்களால் 2002, செத்தெம்பர் 04 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 1734 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்.)*

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்படி சொத்தை, அதே இடத்தில் நான் 2006.10.09 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2005.06.10 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2005.06.22 ஆந் திகதிய "ஐலண்ட்" மற்றும் "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம் :**

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூராட்சி அறவீடுகளாக 1% ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாக கொள்வனவு விலையின் 2 1/2% ;
(4) விற்பனையின் மொத்தச் செலவும் ஏனைய அறவீடுகளும் ;
(5) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிக் கட்டணமாக ரூபா 2,000 ;

விற்பனையிலிருந்து 30 வேலை நாட்களுக்குள் கொள்வனவு விலையின் எஞ்சிய 90% "கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இல. 479, வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி, முகாமையாளர்-சட்ட சம்பந்தமானது (அறவீடுகள்)" அவர்களிடம் பார்வையிடவும், பெற்றுக் கொள்ளவும் முடியும். தொலைபேசி இல.: 2661815, 2661817.

காணி உறுதி ஏனைய தொடர்புடைய ஆவணங்களை "கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இல. 479, ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட், கடன் மேற்பார்வை மற்றும் மீளப்பெறுகை முகாமையாளர்" இடம் பரீட்சித்துப் பெறலாம். 2661817.

ரஞ்ஜித்த எஸ். மஹநாம,
(சமாதான நீதவான் - அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

மஹநாம ட்ரைவ்,
474, பிட்டகோட்டே,
கோட்டே.

தொலைபேசி இல. : 2863121

9-702/1

---

**ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்**

**பன்னிப்பிட்டிய அரவ்வன வீதி, இல. 289, கே. டொன் அமரதாஸ என்பவருக்குச் சொந்தமான பெறுமதியான காணி ஏல விற்பனை (விஸ்தீரணம் 0ஏ. 3றூ. 22பே.)**

ரூ. 9,46,148 கட்டணத்தையும் முழுமையான கட்டணம் செலுத்தி முடியும் வரை அதற்கு 24% வீத வட்டியையும் ஏலதாரர் கட்டணங்கள், வழக்கு கட்டணங்கள் என்பனவற்றையும் வசூலிப்பதற்காக பன்னிபிட்டிய, அரவ்வன, 289 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த கண்டனகே டொன் அமரதாச என்பவருக்கு எதிராக கொழும்பு யூனியன் பிளேஸ் இல. 277, சிலிங்கோ வென்சர் கெபிட்டல் லிமிட்டெட் நிறுவனத்தால் தொடரப்பட்ட 16993/MB இலக்க வழக்கின் மேல் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் எனக்கு வழங்கப்பட்ட கட்டளையின்கீழ் கீழ்கண்ட சொத்தை 2006, ஒற்றோபர் 20 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டிய கோறளை, பள்ளேபத்து, பன்னிபிட்டிய பிலியந்தலை பிரதான வீதியில் அரவ்வல என்ற இடத்தில் அமைந்த அளுபோகாவத்த என்றழைக்கப்படும் காணியின் அனுமதிபெற்ற அளவையாளர் மேர்வின் சமரநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1980 திசெம்பர் 10 ஆந் திகதியும் 120 இலக்கமும் கொண்ட வரைபடத்தின் லொட் 1, 2, 3 எனக் குறிக்கப்பட்ட பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு. இது கூறப்பட்ட 1, 2, 3 துண்டுகள் வடக்கில் : பிலியந்தலை பன்னிபிட்டிய பிரதான வீதியாலும் ; கிழக்கில் : எம். ஈ. சந்திரபாலவின் அலுபோகாவத்தயாலும் ; தெற்கில் : நெற் காணியாலும் ; மேற்கில் : கே. டொன் டேனியல் என்பவரின் அலுபோகாவத்த மற்றும் தெவட்டகாவத்தயாலும் சூழப்பட்டு மூன்று றூட் 22 பேர்ச் (0ஏ. 3றூ. 22பே.) விஸ்தீரணம் கொண்டதாக கொழும்பு காணிப்பிரிவில் M 1547/165 இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**கட்டணம் செலுத்தும் முறை**.- ஏலமுடிவில் உத்தேச கொள்வனவாளரால் கீழ்கண்ட கட்டணங்கள் ரொக்கமாகச் செலுத்த வேண்டும் :

1. கொள்வனவு விலையின் 25% ;
2. உள்ளூர் அதிகார சபைகளுக்கான 1% கட்டணமும் + வற் ;
3. ஏலதாரர் கமிஷன் 2 1/2% ;
4. கூவுவோர், இலிகிதர், தொழிலாளர் கட்டணங்கள் ;
5. நொத்தாரிசு மதிப்பீட்டு கட்டணம் ரூபா 2,000.

ஏல விற்பனைத் திகதி தொடக்கம் 30 நாட்களுக்குள் கொள்வனவின் 75% கட்டணத்தை வழக்கின் வரவில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு.- "கொழும்பு 1, சனாதிபதி மாவத்தை, இல. 69, சிலின்கோ டெவலப்மன்ட் பேங்க், திரு. டீ. தென்னக்கூன் என்பவருடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. : 2388388, 0777 222457

ரஞ்சித் எஸ். மஹாநாம,
(சமாதான நீதவான்-அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர்,
மதிப்பீட்டாளர்,
அனுமதி பெற்ற ஏலதாரர்.

ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்,
மஹாநாம டிரைவ்ஸ்,
474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி இல. 2863121

9-702/2

---

## பிழை திருத்தம்

**இலங்கை வங்கி**

இலங்கை வங்கி (பதியபெலல்ல கிளை)யால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2006.09.08 ஆந் திகதிய 1462 ஆம் இலக்க வர்த்தமானியில் பகுதி I : தொகுதி (II ஆ) இல் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனை அறிவித்தலில் "ஹைபொரஸ்ட் மினரல் வாட்டர் கம்பனி" யின் பங்குதாரரான "கெலே கோரளாலகெதர உபாலி ஜயசூரிய" என்ற பெயர் "கெலே கோராலெலா கெதற ரம்பண்டா" என திருத்தப்பட வேண்டும்.

டி. ஏ. தயானந்த,
முகாமையாளர்.

இலங்கை வங்கி
(பதியபலல்ல கிளை).

9-706

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் விற்பனை செய்தல் தொடர்பான அறிவித்தல்*

**சொத்து நிலமனை ஏல விற்பனை**

தொடர்பு இலக்கம் : கடன்/558/84

*(ஈரியகஸ்தன்ன வத்த, வத்தேகம என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. றன்கெற்றிகே சேனாரத்ன விஜேசிறி, திருமதி ஜயந்தி விஜேசிறி என்பவர்களுக்குச் சொந்தமான ஆதனம்)*

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத் திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2004.10.29 ஆந் திகதிய 1365 இலக்கம் கொண்ட வர்த்தமானியிலும் 2004.10.18 ஆந் திகதிய "தினமின", "தினகரன்", "டெய்லிநியூஸ்" ஆகிய புதினப் பத்திரிகைகளும் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கிணங்க நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாகவுள்ள வட்டியையும் செலவு மற்றும் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடக்கூடிய பணங்களையும் அறவிடும்பொருட்டு இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சொத்தும் நிலமனையும் இலக்கம் 24, ரொறிங்ரன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர்கள் திருவாளர்கள் சொக்மன்-சமரவிக்ரம அவர்களால் 18.10.2006 ஆந் திகதி முற்பகல் 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்ததும்பர, பள்ளே கம்பஹா கோறளை, நாரந்தனவில் அமைந்துள்ள கண்டி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். சீ. கே. ஆர். மிஸ்ஸோ அவர்களால் தயாரிக்கப்பட்ட 1948, யூன் 20 ஆந் திகதிய 2420 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 9 எனக்காட்டுப்பட்டுள்ள ஈரியகஸ்தென்ன வத்தவின் பாகமொன்றாகிய, அனைத்து பக்கங்களிற்கும் மேற்கூறிய வரைபடத்தின் துண்டு 4 எல்லைகளாகக் கொண்ட, மூன்று றூட் முப்பத்தைந்து பேர்ச்சுகள் (0ஏ. 3றூ. 35பே.) விஸ்தீரணமுடையதோடு, மேற்குறிப்பிட்ட 9 ஆந் துண்டு புதிய அளப்பனவிற்கிணங்க, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சிசில் டூல்வல அவர்களால் தயாரிக்கப்பட்ட 1983, பெப்புருவரி 20 ஆந் திகதிய இலக்கம் 1690 கொண்ட வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள, மேற்கூறிய வரைபடத்திற்கிணங்க, வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு ஆகிய பக்கங்களில், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். சீ. கே. ஆர். மிஸ்ஸோ அவர்களால் தயாரிக்கப்பட்ட 1948, யூன் 20 ஆந் திகதிய 2420 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 4 எனக் காட்டப்பட்டுள்ள காணியின் மிகுதிப்பாகமும் எல்லைகளாகக் கொண்ட, பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட வரை படத்தில் காட்டப்பட்டுள்ள றோட்டின் மேலும், நெடுகிலும் பாதையைப் பாவிக்கும் உரித்துடன் கூடிய, திட்டமான காணித்துண்டு அனைத்தும், அதற்குள் உள்ள கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் அனைத்துமாகும். இது கண்டி காணிப்பதிவகத்தில் ஈ 460/126 இல் பதிவு செய்யப்பட் டுள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

ஈ. எம். யூ. பண்டார,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்றரக்கிளை,
கண்டி.

9-707

---

**டீ. எப். சி. சி. வங்கி**

(முன்பு இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம்)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின்கீழான விற்பனை*

**கம்மதுவ பெருந்தோட்டம் (தனி) நிறுவனம் ஏலவிற்பனை**

10563 ஆம் இலக்கம் கொண்ட பிணை உறுதிகளின் கீழ் அடகு வைக்கப்பட்ட சொத்தின் விபரம் அடங்கும் குத்தகை உரிமை கம்மதுவ என்றழைக்கப்படும் பெருந்தோட்டங்களும் கட்டிடங்களும் அவற்றி லுள்ள தோட்ட பங்களாக்களும் லயங்களும் காரியாலயங்களும் நறுக்கும் தளங்களும் ஏனைய கட்டிடங்களும், மரஞ்செடிகளும் கற்பாறைகளும் மற்றும் அவற்றில் இருப்பவையும் உள்ளடங்குபவையும், மத்திய மாகாண மாத்தளை பிரதேசத்தில் கிழக்கு மாத்தளை அம்பங்கங்க கோரளையில் உள்ள கம்மதுவ கிராமத்திற்கு அடங்கியதும் உரிமை பெற்ற நிலஅளவையாளர் பீ. எஸ். எம். எம். பாதெனிய என்பவரால் 1997 திசெம்பர் 29 ஆந் திகதி அன்று பகுதிகள் 1, 2, 3, 4 என பிரித் தெழுதப்பட்ட இலக்கம் 68/97 கொண்ட கம்மதுவ ஷே பெருந் தோட்டத்தின் கம்மதுவ டிவிஷன் என்ற முழுப்பகுதியும், விஸ்தீரணம் : பகுதிகள் 1, 2, 3-205.3296 ஹெக்டயார் பகுதி 4-45.4548 ஹெக்டயார் 2006, செத்தெம்பர் 6 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**.- சித்திகரமான கொள்வன வாளர் ஏலம் முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை வீதம்);
(4) ரூ. 23,000 க்கு மேற்படாத மொத்த விளம்பரச் செலவின் 50% ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கு நொத்தாரிசு கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்டரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகாரசபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங் களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு டீ. எவ். சீ. சீ. வங்கியின் சட்டத் திணைக் களத்தை தொலைபேசியில் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. : 011-2440366.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
இலங்கையின் கீர்த்திவாய்ந்த பட்டய ஏலதாரர்,
மற்றும் ஆலோசக மதிப்பீட்டாளர்.

| பிரதான அலுவலகம் : | நகர அலுவலகம் : |
|---|---|
| 24, டொரிங்டன் பாதை, | 55ஏ, தர்மபால மாவத்தை, |
| கண்டி. | கொழும்பு 03. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி இல. : 011-2441761 |
| தொலைநகல் : 081-2224371 | தொலைநகல் : 011-2448526 |
| | மின்னஞ்சல் : samera@sri.lanka.net |

9-723

---

## றுஹுஈன அபிவிருத்தி வங்கி - ஹக்மன கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

பிரசித்திபெற்ற ஏலவிற்பனை

றுஹுஈன அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் குறிப்பிடுகின்ற சொத்துக்கள் 2006.10.10 ஆந் திகதி மு. ப. 10.30 க்கு சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்.**- தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலே வடக்கு கிளுவாபத்துவை கனுமுல்தெனியவில் அமைந்துள்ள கல்கொடவத்தை யில் பிரிக்கப்படாத ஹக்மன வலஸ்முல்ல பாதையில் கீழ் பக்கமான துண்டு என்ற காணித்துண்டை அதிகாரம்பெற்ற நிலஅளவை யாளரான எஸ். எல். கலப்பத்தின் அவர்களால் அளந்து ஒழுங்கு செய்யப்பட்ட இலக்கம் 4029ஏயும் 1091.09.08 ஆந் திகதிக்குரிய வரைபடத்தின் பிரகாரம் பிரித்து வேறுபடுத்திய துண்டு இலக்கம் 1 என்ற றூட் ஒன்றும் பர்ச்சஸ் இருபத்து மூன்று (0ஏ. 1றூ. 23பே.) மிகப்பெரிய காணியும், அதன்அனைத்து கட்டிடங்களும், மரங்கள், பழவர்க்கங்கள், போன்ற அனைத்தும் அடங்கலாக.

**மேலதிக விபரங்களுக்கு.**-2006.01.12 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006.04.28 ஆந் திகதிய "தினமின", "தினகரன்", "த ஐலண்ட்" ஆகிய பத்திரிகையிலும் வெளியிடப்பட்டிருக்கும் ஏலவிற்பனை அறிவித்தல் பகுதியை கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- ஹக்மன வலஸ்முல்ல பிரதான **வீதியில்** மீஎல்ல முச்சந்தியை தாண்டியதும் கி. மீற்றர் 01 அளவு தூரம் முன்னோக்கி செல்ல **வீதியின்** இடப்பக்கமாக இச்சொத்துக்கள் அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**-ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் கீழ் குறிப்பிட்டபடி பணத்தை கொள்வனவாளரினால் பணமாக செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு விலையில் 10% ;

(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு விற்பனை விலையில் 1%;

(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையின் 2 1/2% ;

(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூ. 500 ;

(5) விற்பனை செலவும் வேறு செலவுகள் இருப்பின் அப்பணமும் ;

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை ஏலவிற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "மாத்தறை, பம்புரணயில் அநாகாரிக தர்மபால மாவத்தையில் இலக்கம் 382ஏ என்ற நிலையத்தில் இருக்கும் றுஹுஈன அபிவிருத்தி வங்கி, பொது முகாமையாளர்"க்கு செலுத்த வேண்டும்.

உரிமைகோறும் ஒப்பினையையும், குறிப்பிட்ட விவரங்களையும் மேலுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் : 041-2231532, 2226208, 2226209.

ஜீ. பீ. ஆனந்த,
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை,
தொலைபேசி இலக்கம் : 041-2228731

9-731

---

## மக்கள் வங்கி

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தமாக 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி எனும் அதிகாரத்தின் கீழ் விற்பனை

**மாத்தறை நகர சபை எல்லைக்குள் ஹக்மன பாதையில் கபடா வீதியில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டு இலக்கம் 28/3 கொண்ட பெறுமதி வாய்ந்த காணியும் கட்டிடங்களும் ஏல விற்பனை**

மக்கள் வங்கி மூலம் எமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2006.10.09 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே எங்களால் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**சொத்துக்கள் பற்றிய விவரணம்**

1. தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே மாத்தறை நகர சபை எல்லைக்குள், கடவத்சதரைக்குள்ளும், கபடா வீதியில் அமைந்துள்ள ஹக்மன்ன வீதியில் இலக்கம் 28/3 என்ற வேவெல்பொகுனவத்த எனும் பெயருடைய காணியை பிரித்து, இல. 1 என்ற காணித்துண்டை (பீ. 13381) எனும் பகிர்ந்து வேறாக்கி உட்படுத்தப்பட்ட) 1988.01.26 ஆந் திகதியின் அதிகாரம்பெற்ற நிலஅளவையாளரான திரு. எம். எச். பீ. சிரிவர்தன அவர்களின் இல. 630 எனும் வரைபடத்தின் பிரகாரம், அளந்து வேறாக்கப்பட்டதும், அண்மையில் அளந்து ஒழுங்கு செய்யப்பட்டதுமான 1989.05.08 ஆந் திகதியின் அதிகாரம் பெற்ற நிலஅளவையாளரான எம். எச். பீ. சிரிவர்தன என்பவரினால் ஒழுங்கு செய்யப்பட்டதுமான இல. 272 என்ற வரைபடத்தின் பிரகாரம் முப்பது பர்ச்சஸ் (0ஏ. 0றூ. 30பே.) என்ற மிகப்பெரிய காணியும், அதில் அமைந்துள்ள பயிர்கள், கட்டிடங்கள் போன்ற அனைத்து மாகும். அத்துடன் 8' அடியும், 20' அடி அகலமும் உள்ள இலக்கம் 272 என்ற வரைபடத்தின் குறிப்பிட்ட இல. 4 இல் பாதைக்கான உரிமையுண்டு.

2. மேலே குறிப்பிடப்பட்ட கபடா வீதியில் ஹக்மன பாதையின் வருமான வரி இலக்கம் 28/3 என்ற வேவெல்பொகுன எனும் பெயருடைய காணித்துண்டு இல. 2 உம், 13381 என்ற பகிரப்படு கின்ற வழக்கு உட்படுத்தப்பட்ட 1988.01.26 ஆந் திகதியின் அதிகாரம்பெற்ற நிலஅளவையாளரான திரு. எம். எச். பீ. சிரிவர்த்தன அவர்களின் இல. 630 என்ற வரைபடமும் அண்மையில் அளந்து ஒழுங்கு செய்யப்பட்ட அந்த அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் அவர்களினால் 1989.05.08 ஆந் திகதி இலக்கம் 272 என்ற வரைபடத்தின் பிரகாரம் பத்து பர்ச்சஸ் (0ஏ, 0றூ. 10பே.) எனும் மிகம்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்துமாகும். இல. 272 எனும் வரைபடத்தில் குறிப்பிட்டபடி இல. 04 என்ற 8' அடியும், 20' அகலமான வீதியின் உரிமையும் குறிப்பிட்டிருக்கும்.

**மேலதிக விபரங்களுக்கு**.-2002.01.11 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையிலும் 2002.11.02 ஆந் திகதிய "தினமின", ஆகிய பத்திரிகையிலும் வெளியிடப்பட்டிருக்கும் ஏலவிற்பனை அறிவித்தல் பகுதியை கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்**.- மாத்தறை ஹக்மன வீதியில் அமைந்துள்ள உயன்வத்த மக்கள் வங்கியை கடந்து சுமார் 50 யார் அளவு தூரம் செல்ல இச்சொத்துக்கள் அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**.-ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் கீழ் குறிப்பிட்டபடி பணமாக வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் பணமாக செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு விலையில் 10% ;

(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு விற்பனை விலையில் 1%;

(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையின் 2 1/2% ;

(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூ. 500 ;

(5) விற்பனை செலவும் வேறு செலவுகள் இருப்பின் அப்பணமும் ;

(6) விற்பனை உறுதிப்பத்திரமும், முத்திரைக்கட்டணமும்.

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "மக்கள் வங்கி, மாத்தறை பிரதேச பிரதான அலுவலகத்தின் பிரதான முகாமையாளர்" அவர்களுக்கு செலுத்த வேண்டும்.

தொலைபேசி இலக்கம் : 041-2222792, 2222822, 2224773.
பெக்ஸ் இலக்கம் 041- 2222688.

உரிமைகோரும் ஒப்பினையும் வேறு விவரங்களையும் மேலுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் தற்போதைக்குச் செலுத்தியிருக்கும் கொள்வனவு விலையின் 10%க்கான பணத்தை திருப்பிச் செலுத்தாது விடவும், மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு.

ஜீ. பீ. ஆனந்த,
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை,
தொலைபேசி இலக்கம் : 041-2228731

9-739

---

**மக்கள் வங்கி-புறக்கோட்டை கிளை**

கொழும்பு 3, அல்பிரட் பிளேஸில் பெறுமதிமிக்க இரண்டு படுக்கையறையுடன் குடியிருப்பு தொகுதி-பிரித்து நிர்ணயிக்கப் பட்ட குடியிருப்பு வளவுகள் முழுவதும் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, கொழும்பு மாவட்ட இறைவரி அலுவலர் பிரிவு மற்றும் மாநகர சபையினுள், வட்டார இல. 38-பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள தும் அல்பிரட் பிளேஸ், வரிமதிப்பு இல. 39 2/2 ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். எஸ். ரீ. பீ. சேனாதீர அவர்களால் தயாரிக்கப்பட்டு 1974, சனவரி 23 ஆந் திகதியிடப் பட்ட கூட்டாச்சி வரைபடம்இல.732 இற்கமைய கூறு 8 என அடையாள மிடப்பட்டதுமாகும்.)

(தரை பரப்பு : 1225 ச. அடி)

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொது வசதிகளுடன் சேர்த்து :

பொது வசதிகள் :

படிக்கட்டு மற்றும் இசற் என அடையாளமிடப்பட்டுள்ள தரையிறங்கு பகுதியின் எல்லைகளாவன-

வடக்கு : படிக்கட்டு வட சுவரின் மத்தி மற்றும் இசற் என அடையாளமிடப்பட்டுள்ள தரையிறங்கும் பகுதி ;

கிழக்கு : படிக்கட்டு கிழக்கு சுவரின் மத்தி மற்றும் இசற் என அடையாளமிடப்பட்டுள்ள தரையிறங்கும் பகுதி ;

தெற்கு : படிக்கட்டு தென் சுவரின் மத்தி மற்றும் இசற் என அடையாளமிடப்பட்டுள்ள தரையிறங்கும் பகுதி ;

மேற்கு : படிக்கட்டு மேற்கு சுவரின் மத்தி மற்றும் இசற் என அடையாளமிடப்பட்டுள்ள தரையிறங்கும் பகுதி.

இரண்டாம் தள தொடர்மாடி இல. 39 2/1 மேல் முகட்டின் உச்சி ; படிக்கட்டு தரைப்பகுதியின் மத்தி மற்றும் இசற் என அடையாளமிடப்பட்டுள்ள தரையிறங்கும் பகுதி-தரை பரப்பு 440 ச. அடி-அடிப்பகுதியாகும்.

சொல்லப்பட்ட கூறு தொடர்புபட்ட பொது வசதிகள் பங்கு :

கூறு 8-வரிமதிப்பு இல. 39 2/2-$\frac{1225}{7335}$ பங்கு

16.7% ; இது கொழும்பு காணிப்பதிவகத்தில் கூட்டா. ஏ 3/104 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஏல விற்பனை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப் பட்ட ஆதனத்தை 2006, ஒற்றோபர் 9 ஆந் திகதி, திங்கட்கிழமை மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 1999.04.16 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 1999.03.26 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலமுடிவில் வெற்றி பெறும் கொள்வனவாளர் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள் (எவை யேனுமிருப்பின்) ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம் ;

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள், "கொழும்பு 1, டியூக் வீதி, இல. 11, வலய அலுவலகம் (மேற்கு 01), மக்கள் வங்கி, உதவிப் முகாமையாளர்" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 4-717008-9, 2393678.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.



சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

டன்ஸ்டன் கெலார்ட்,
நீதிமன்ற ஆணையாளரும் தரகரும்,
நிபுணத்துவம்பெற்ற ஏலதாரர்,
ஆதன முகவரும் விலைமதிப்பிடுநரும்.

381 1/1, காலி வீதி,
கொழும்பு 4.

தொலைபேசி இல. : 2591167
தொலைபேசி/தொலைநகல் இல. : 2500838, 2584874
துரித அழைப்பு : 0772-250422

9-734

---

**மக்கள் வங்கி-தலைமை அலுவலகம் மற்றும் கேகாலை கிளைகள்**

பெறுமதிமிக்க பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டுகள்-

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், பரணகுறு கோறளை, மாவத்த பற்று கேகாலை நகர சபை எல்லைகளுக்குள், வட்டார இல. 1, கொழும்பு-கண்டி வீதி வழியே ரன்வலவில் அமைந்துள்ள ஜீபொடியா ஹிட்டியா வத்தஊ என்ற ஜீமுத்து போருவே ஹேன மற்றும் பட்டஹேனஊ என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். கனகரட்னம் அவர்களால் தயாரிக்கப்பட்ட வரைபடம் இல. 891/கேஜீ இல் குறிப்பிடப்பட்டு துண்டுகள் 1 மற்றும் 3 என அடையாளமிடப்பட் டுள்ளதாகும்) அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை

(காணிகளின் விஸ்தீரணம் : துண்டு 3-0ஏ. 1றூ. 23பே.)
மற்றும்
துண்டு 1-0ஏ. 0றூ. 5பே.)

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- கேகாலை சென். ஜோசப் கல்லூரியிலிருந்து கொழும்பை நோக்கி கூட்டுறவு சமூக நிரப்பு நிலையம் வரை ஏறக்குறைய 50 யார் செல்லவும். இதற்கு முன்னால் பழைய ரார்சன் பஸ் கம்பனியை காண்பீர்கள். துண்டு 1 இதனைத் தொடர்ந்திருக்கும் ; துண்டு 3, துண்டு 1 இற்குப் பின்னால் இருக்கிறது.

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ், 2000.08.28 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் எனக்கு அளிக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்குறிப் பிடப்பட்ட ஆதனத்தை 2006, ஒற்றோபர் 07 ஆந் திகதி, சனிக்கிழமை மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2000.11.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2000.11.15 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", 2000.11.13 ஆந் திகதிய "தினமின" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- ஏலமுடிவில் வெற்றிபெறும் கொள்வனவாளர் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;

(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம் மட்டும்) ;

(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவை யேனுமிருப்பின்) ;

(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம் ;

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள், "கொழும்பு 1, டியூக் வீதி, இல. 11, வலய அலுவலகம் (மேற்கு 01), மக்கள் வங்கி, உதவிப் பொது முகாமையாளர்" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 2387068, 2387848, 2393678 மற்றும் 2435977.

உரித்து உறுதிகளையும் வேறு குறிப்புக்களையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

டன்ஸ்டன் கெலார்ட்,
நீதிமன்ற ஆணையாளரும் தரகரும்,
நிபுணத்துவம்பெற்ற ஏலதாரர்,
ஆதன முகவரும் விலைமதிப்பிடுநரும்.

381 1/1, காலி வீதி,
கொழும்பு 4.

தொலைபேசி இல. : 2591167
தொலைபேசி/தொலைநகல் இல. : 2500838, 2584874
துரித அழைப்பு : 0772-250422

9-735